

செங்கல்பட்டு மாவட்டம், மண்ணிவாக்கத்தில் அமைந்துள்ள ஸ்ரீ நடேசன் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற கலை மற்றும் அறிவியல் கண்காட்சியை குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் துவக்கி வைத்து பார்வையிட்டார். அருகில் செங்கல்பட்டு சட்டமன்ற உறுப்பினர் வரலட்சுமி மதுசூதனன் மற்றும் தலைமை ஆசிரியர், மாணவ – மாணவியர்கள் உள்ளனர்.



திருவள்ளூர் மாவட்டம் திருத்தணி சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட பள்ளிப்பட்டு ஒன்றியம் கோனா சமுத்திரத்தில் அப்பகுதி மக்களிடம் திருவள்ளூர் மேற்கு மாவட்ட கழகச் செயலாளரும் திருத்தணி சட்டமன்ற உறுப்பினர் திருத்தணி எஸ்.சந்திரன் குறைகளைக் கேட்டறிந்து அடிப்படை வசதிகள் உடனடியாக செய்து தரப்படும் என்று பொது மக்களிடம் தெரிவித்தார். உடன் கழக நிர்வாகிகள் உள்ளாட்சி பிரதிநிதிகள் பலர் உள்ளனர்.

### வழக்கறிஞர் எம்.ஸ்ரீதரன் தலைமையில்

# 140-வது வட்ட செயல்வீரர்கள் கூட்டம்!

### அமைச்சர் மா.சுப்பிரமணியன் சிறப்புரை! தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி., மு.மகேஷ்குமார், வாசுகி பாண்டியன், எம்.கிருஷ்ணமூர்த்தி எம்.சி. பங்கேற்பு!

சென்னை, செப் 1-

சென்னை தெற்கு மாவட்டம் - சைதை மேற்கு பகுதி, 140-வது வட்ட தி.மு.க. சார்பில் 01.09.2024 ஞாயிற்றுக்கிழமை காலை 11 மணியளவில் மேற்குமாம்பலம் கோவிந்தன் சாலை நாகரத்தினம்மாள் தெருவில் உள்ள நாகரத்தினமாள் திருமண மண்டபத்தில் பொதுக்குழு உறுப்பினரும், 140வது வார்டு மாமன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் எம்.ஸ்ரீதரன் தலைமையிலும், பகுதி கழக செயலாளரும், பத்தாவது மண்டலகுழு தலைவருமான எம்.கிருஷ்ணமூர்த்தி, பொதுக்குழு உறுப்பினர் சைதை மா.அன்பரசன், பகுதி கழக நிர்வாகிகள் த.சம்பத், கவிதாகௌதமன் முன்னிலையிலும், வழக்கறிஞர் த.பாபு, வழக்கறிஞர் எம்.சுரேஷ்குமார், மாவட்ட பிரதிநிதி கு.புகழ்வேந்தன், ஜி.பாபு, வட்டகழக நிர்வாகிகள் பிரஸ் க.மணி, லால்மனோகரன், எஸ்.மணிவண்ணன், எம்.வளர்மதி, அ.வீரமணி, ஆ.கவிராஜ். எம்.அய்யாவு, ஆர்.பன்னீர், இ.பாண்டுரங்கன், கே.ஞானம் ஆகியோர் வரவேற்பில் ஆலோசனைக்கூட்டம் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்திற்கு சென்னை தெற்குமாவட்ட கழக செயலாளரும், மருத்துவம் மற்றும் மக்கள்நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் பங்கேற்று பல்வேறு கருத்துக்களை எடுத்துரைத்து ஆலோசனைகளை வழங்கவுள்ளார்.

மேலும் இக்கூட்டத்திற்கு தென்சென்னை நாடாளுமன்றஉறுப்பினர் முனைவர் தமிழச்சி தங்கபாண்டியன், சென்னை பெருநகர மாநகராட்சி துணைமேயர் மு.மகேஷ்குமார், மாவட்ட துணைச் செயலாளர் வாசுகிபாண்டியன், பகுதிகழக நிர்வாகிகள் களக்காடிஎல்லப்பன், ஆர்.ரமேஷ், வி.பி.ஜானகிராமன், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் ந.மணிகண்டன், அஞ்சல்ராமன், கோ.பாஸ்கரன், மாவட்டஇளைஞர்அணி துணைஅமைப்பாளர் ஆர்.கிருஷ்ண குமார் ஆகியோர் பங்கேற்று சிறப்பிக்கவுள்ளனர்.

எனவே இக்கூட்டத்திற்கு அனைத்து அணிகளை சார்ந்த மாவட்ட துணை அமைப்பாளர்கள், பகுதி அமைப்பாளர்கள், பகுதி துணை அமைப்பாளர்கள், பகுதிபிரதிநிதிகள், வட்டசெயற்குழு உறுப்பினர்கள், கழக முன்னோடிகள், கழக செயல்வீரரார்கள், பாககஒருங்கிணைப்பாளர்கள், பாகபொறுப்பாளர்கள், பாக களப்பணியாளர்கள், வட்டஇளைஞர்அணி நிர்வாகிகள், வட்டதகவல் தொழில்நுட்ப அணி நிர்வாகிகள் உள்ளிட்ட கழக தோழர்கள் பங்கேற்று இக்கூட்டத்தினை சிறப்பித்து தருமாறு பொதுக்குழு உறுப்பினர் வழக்கறிஞர் எம்.ஸ்ரீதரன் எம்.சி., வேண்டுகோள் விடுத்துள்ளார்.

### வட்ட செயலாளர் தா.மோகன்குமார் எம்.சி., தலைமையில்

# 168 ‘அ’ வட்ட செயல்வீரர்கள் கூட்டம்!

### அமைச்சர் மா.சுப்பிரமணியன் சிறப்புரை! தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி., மு.மகேஷ்குமார், வாசுகி பாண்டியன், இரா.துரைராஜ் எம்.சி. பங்கேற்பு!

சென்னை, செப் 1-

சென்னை தெற்கு மாவட்டம் - சைதை கிழக்கு பகுதி, 168வது “அ” வட்ட தி.மு.க. சார்பில் 01.09.2024 ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணியளவில் கிண்டி அருளாயம் மன்பேட்டையில் உள்ள அரிமா சங்க லேபர் காலனி உயர்நிலைப்பள்ளியில் வட்டகழக செயலாளரும், 168வது வார்டு மாமன்ற உறுப்பினர் தா.மோகன்குமார் தலைமையிலும், பகுதி கழக செயலாளரும், பதிமூன்றாவது மண்டலகுழு தலைவருமான இரா.துரைராஜ், பொதுக்குழு உறுப்பினர்கள் சைதைசம்பத், மின்னல் கந்தப்பன், பகுதிகழக நிர்வாகிகள் இ.முருகே சன், ஆர்.ராஜ்குமார், மு.ஆரோக்கியம், ஆர்.அருணகிரி, மு.பாக்கியலட்சுமி முன்னிலையிலும் மாவட்டபிரதிநிதி ச.சேகர், வட்டகழகநிர்வாகிகள், ஏ.சீனிவாசன், த.பாண்டியன், ஐமாஸ் பாலா, மீனாபரமானந்தம், ஜி.என்.நாராயணன், பகுதி பிரதிநிதிகள் என்.மேகநாதன், ஜி.வெங்கடேசன், எம்.லிங்கேஷ், டி.மனோ வரவேற்பில் நடைபெறவுள்ள இக்கூட்டத்திற்கு சென்னை தெற்குமாவட்ட கழக செயலாளரும், மருத்துவம் மற்றும் மக்கள்நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் பங்கேற்று பல்வேறு கருத்துக்களை எடுத்துரைத்து ஆலோசனைகளை வழங்கவுள்ளார்.

மேலும் இக்கூட்டத்திற்கு தென்சென்னை நாடாளுமன்றஉறுப்பினர் முனைவர் தமிழச்சி தங்கபாண்டியன், சென்னை பெருநகர மாநகராட்சி துணைமேயர் மு.மகேஷ்குமார், மாவட்ட துணைச் செயலாளர் வாசுகிபாண்டியன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

மேலும் இக்கூட்டத்திற்கு அனைத்து அணிகளை சார்ந்த மாவட்ட அமைப்பாளர்கள், மாவட்ட துணை அமைப்பாளர்கள், பகுதி அமைப்பாளர்கள், பகுதி துணை அமைப்பாளர்கள், பாக ஒருங்கிணைப்பாளர்கள், பாகபொறுப்பாளர்கள், பாககளப்பணியாளர்கள், வட்ட இளைஞர்அணி நிர்வாகிகள், வட்ட தகவல் தொழில்நுட்ப அணி நிர்வாகிகள், கழக முன்னோடிகள், கழக செயல்வீரர்கள், ஆகியோர் இக்கூட்டத்தினை பங்கேற்று சிறப்பித்து தருமாறு வட்டகழக செயலாளர் தா.மோகன்குமார் எம்.சி., வேண்டுகோள் விடுத்துள்ளார்.

### க.கணேஷ்குமார் தலைமை! துரை கபிலன் முன்னிலை!

# வேளச்சேரி 180 வது வட்டக் கழகச் செயல்வீரர்கள் கூட்டம்!

### மாவட்டச் செயலாளர் – அமைச்சர் மா.சுப்பிரமணியன் சிறப்புரை!

சென்னை, செப். 1

சென்னை தெற்கு மாவட்டம், வேளச்சேரி கிழக்குப் பகுதி, 180 வது வட்டக் கழகச் செயல்வீரர்கள் கூட்டம் இன்று (01.09.2024 - ஞாயிற்றுக்கிழமை) மாலை 5 மணியளவில், திருவான்மியூர், ராஜலட்சுமி திருமண மண்டபத்தில் நடைபெறுகிறது.

180 வது வட்டக் கழகச் செயலாளர் க.கணேஷ்குமார் தலைமை வகிக்கிறார்.

பகுதிக் கழகச் செயலாளர் துரை கபிலன், எம்.விநாயகமூர்த்தி, விசாலாட்சி கபிலன் எம்.சி, ஆர்.பாலசுந்தரம், அடையார் பி.ஜெ.பாஸ்கர், அடையார் சி.சுரேஷ், சி.பரிமேலழகன், மந்தைவெளி மு.நடராஜன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

அருணா வேலாயுதம், இரா.மாரியப்பன், வழக்கறிஞர் எஸ்.கோபால், பி.சி.ஆறுமுகம், இ.நித்திய குமார், மா.ராமகிருஷ்ணன், ந.தண்டபாணி, ஜே.மகேஷ், கு.கண்ணன், கி.அரசு, வி.விக்னேஷ் ஆகியோர் வரவேற்புரை ஆற்றுகின்றனர்.

இக்கூட்டத்தில் மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் மா.சுப்பிர மணியன் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றுகிறார்.

இக்கூட்டத்தில் தென் சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் தமிழச்சி தங்கபாண்டியன், துணை மேயர் மு.மகேஷ்குமார், சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ்.அரவிந்த்ரமேஷ், காரம்பாக்கம் க.கணபதி, ஏ.எம்.வி.பிரபாகர்ராஜா, வேளச்சேரி பி.மணிமாறன் எம்.சி, க.தனசேகரன் எம்.சி, பாலவாக்கம் க.சோமு, எஸ்.குணசேகரன், பாலவாக்கம் த.விஸ்வநாதன் எம்.சி, பாலவாக்கம் மு.மனோகரன், வேளச்சேரி எஸ்.பாஸ்கரன் எம்.சி, வாசுகி பாண்டியன் எம்.சி, வழக்கறிஞர் எஸ்.சந்தானம், ஆ.ச.ஸ்ரீகாந்த், அ.ரவிகிருஷ்ணன், கே.சி.வனஜா மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

வட்ட துணைச் செயலாளர் வெ.தமிழரசி, வட்டப் பொருளாளர் சு.லட்சுமணன் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.



சென்னை தென்மேற்கு மாவட்டம், மயிலை மேற்கு பகுதி, 121வது வட்ட கழக பொது உறுப்பினர்கள் கூட்டம் 29.08.2024 வியாழக்கிழமை, வட்ட அவை தலைவர் கி.சேகர் தலைமையில், வட்ட கழக நிர்வாகிகள் முன்னிலையில், மாவட்ட பிரதிநிதிகள், பகுதி பிரதிநிதிகள் வரவேற்பில், மயிலை மேற்குப் பகுதி செயலாளர் நந்தனம் மதி எம்.சி., வட்ட செயலாளர் டி.ராஜவேலு ஆகியோர் கலந்து கொண்ட இக்கூட்டத்தில், மாவட்ட செயலாளரும், மயிலாப்பூர் சட்டமன்ற உறுப்பினருமான மயிலை த.வேலு கலந்துகொண்டு ஆலோசனைகளை வழங்கினார்.

### வே.வாசு தலைமை! அ.வெற்றிஅழகன் எம்.எல்.ஏ. முன்னிலை! முன்னாள் - 97 வது வட்டக் கழகச் செயலாளர்

# ஜி.சீனிவாசன் இல்லத் திருமண வரவேற்பு! அமைச்சர் பி.கே.சேகர்பாபு வாழ்த்துகிறார்!

### தயாநிதி மாறன் எம்.பி. - கலாநிதி வீராசாமி எம்.பி. - மேயர் பிரியா ராஜன் - இரா.கிரிராஜன் எம்.பி. - கழகத்தினர் வாழ்த்து!

சென்னை, செப். 1 -

கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர், கழக இளைஞர் அணிச் செயலாளர், அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோரின் நல்வாழ்த்துக்களுடன், சென்னை கிழக்கு மாவட்டம், வில்லிவாக்கம் கிழக்குப் பகுதி, முன்னாள் 97 வது வட்டக் கழகச் செயலாளர் (நினைவில் வாழும்) ஜி.சீனிவாசன் - நிர்மலா சீனிவாசன் ஆகியோரின் புதல்வியும், 97 வது வட்டக் கழகச் செயலாளர் விக்னேஷ் சீனிவாசனின் சகோதரியுமான காயத்ரி சீனிவாசனுக்கும், சென்னை, தண்டையார் பேட்டை, (நினைவில் வாழும்) ஏ.முருகேசன் - அமுதா முருகேசன் ஆகியோரின் புதல்வர் மணிகண்டன் முருகேசனுக்கும், திருமண வரவேற்பு விழா இன்று (01.09.2024 - ஞாயிற்றுக்கிழமை) மாலை



6 மணிக்கு மேல், சென்னை, ஐ.சி.எப்.பில் அமைந்துள்ள டாக்டர் அம்பேத்கர் அரங்கத்தில் நடைபெறுகிறது.

வில்லிவாக்கம் கிழக்குப் பகுதிக் கழகச் செயலாளர் வே.வாசு தலைமை வகிக்கிறார்.

வில்லிவாக்கம் சட்டமன்ற உறுப்பினர் அ.வெற்றிஅழகன், கூ.பீ.ஜெயின், டி.வி.செம்மொழி, சாவித்திரி ஸ்ரீ வீரராகவன், லதா வாசு, டி.சம்பத், டி.தாமோதரன், வி.அமுலு, நா.அறிவுடைநம்பி, ச.மனோகரன், எ.வேதா, கே.பாஸ்கர், சி.தேவராஜ், காஞ்சி செ.துரை ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

கி.ஜெயசங்கர், ஆ.உதயன், வி.பசுபதி, ஆர்.சின்னா, மு.முத்துப் பிள்ளை, எஸ்.தியாகு, என்.ஜெயவேலு, வி.சங்கர், ஆ.கணேசன், சி.அன்பழ கன், சி.ரவிக்குமார் ஆகியோர் வரவேற்புரை ஆற்றுகின்றனர்.

திருமண வரவேற்பு விழாவில் சென்னை கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் பி.கே.சேகர்பாபு கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்துகிறார்.

திருமண வரவேற்பு விழாவில் தயாநிதி மாறன் எம்.பி, கலாநிதி வீராசாமி எம்.பி, மேயர் பிரியா ராஜன், ப.ரங்கநாதன், ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ, ப.தாயகம் கவி எம்.எல்.ஏ, வே.கௌதமன், பி.கே.மூர்த்தி, சரிதா மகேஷ்குமார், ப.ஸ்ரீராமலு, பரிதி இளம் சுருதி, கோ.ஏகப்பன், தேவஜவகர், ஜி.மகாதேவன், புனிதவதி எத்திராசன், இசட்.ஆசாத், ஐ.சி.எப்.வ.முரளிதரன், எ.நாகராசன், டி.எஸ்.பி.ராஜகோபால், எம்.டி.ஆர்.நாகராஜ், செ.தமிழ் வேந்தன், எம்.சாமிகண்ணு, எஸ்.ராஜசேகர், எஸ்.முரளி, சொ.வேலு, வி.சுதாகர்,

டி.லோகேஷ், வானவில் விஜய், சுதா தீனதயாளன், நா.துலுக்கானம், எல்.பி.எப்.மோகன், ராஜேஸ்வரி ஸ்ரீதர், ஜி.சாந்தகுமாரி, பா.பிரதீப்குமார், பி.விஜயகுமார், எஸ்.தனலட்சுமி, ஆ.பிரியதர்ஷினி, ஜெ.எஸ்.பிரபு, வி.து.இராமமூர்த்தி, பா.இளையா, ம.கலைச்செல்வி, மு.சுரேஷ்பாபு, மற்றும் கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள் பலர் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்துகின்றனர்.

மாவட்டப் பிரதிநிதி வி.சபாபதி நன்றி கூறுகிறார்.

### பகுதிச் செயலாளர் இரா.துரைராஜ் முன்னிலை! சைதை கிழக்கு -

# 170 வது வட்ட பொது உறுப்பினர்கள் கூட்டம்: அமைச்சர் மா.சுப்பிரமணியன் சிறப்புரை!

### வட்டச் செயலாளர் கோட்டூர்புரம் க.மணி வேண்டுகோள்!

சென்னை, செப். 1 -

சென்னை தெற்கு மாவட்டம் சைதை கிழக்கு பகுதி 170 வது வட்ட தி.மு.க பொது உறுப்பினர்கள் கூட்டம் இன்று (01.09.2024, ஞாயிற்றுக்கிழமை) மாலை 6.00 மணியளவில் கோட்டூர் அட்வண்ட் சிறித்துவ நடுநிலைப் பள்ளியில் வட்ட கழக செயலாளர் கோட்டூர்புரம் க.மணி தலைமையில் நடைபெறுகிறது. மண்டலக்குழு தலைவர் பகுதி செய்லாளர் இரா.துரைராஜ் முன்னிலை வகித்துப் பேசுகிறார்.

இதில் எஸ்.ஜெ.சலாம், என்.பாபு, கே.பன்னீர் செல்வம், கே.அரிபாபு, எஸ்.ராஜா, ஏ.கே.என்.உதயா, ஜி.மேனகா, பி.பூமிநாதன், எஸ்.பிரகாஷ், ஏ.கருணாகரன், ஆர்.நந்தகுமார், டி.ராஜா, ஜி.பாஸ்கர், கே.கேசவன், ஜே.ஜேம்ஸ் குமார், வி.தரணி, எஸ்.ஆறுமுகம், கே.மகி, ஜி.குமார், இ.வினோத் குமார், எம்.ரமணி ஆகியோர் வரவேற்கின்றனர்.

சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளர் அமைச்சர் மா.சுப்பிரமணியன் முனைவர் தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி., துணை மேயர் மு.மகேஷ்குமார், தொகுதி தேர்தல் பொறுப்பாளர் கோ.வி.லெனின், தொகுதி பார்வையாளர் வாசுகி பாண்டியன் ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர்.

மாவட்ட இளைஞரணி கோட்டூர் எஸ்.பிரகாஷ், எஸ்.புவனேஷ்வரி, ஏ.பார்வதி, எஸ்.ரமேஷ், டி.ராமகிருஷ்ணன், ஏ.அப்சல் பாஷா, க.குமார், டி.ராஜலிங்கம், ஆர்.உமாபதி, சி.குணசேகர், சி.விஜயகுமார், விசேஷ், வி.மகேஷ், லஷ்மிகாந்தன், ஆர்.எஸ்.சுகுமார்பாபு, சி.நவநீதகிருஷ்ணன், சி.C.இந்திரசெல்வன், க.இளவழகன், எஸ்.கென்னடி, கார்த்திக், ஏ.ராகவன், பி.சரோஜா, எம்.செல்வி, எம்.டி.ரவிக்குமார், எம்.சி.சி..மூர்த்தி, எஸ்.எபினேசர், டி.பத்மநாபன், கே.கவின், மோகன்ராஜ் (எ) சாம், பி.பாலாஜி, எஸ்.கலையரசன், வி.சந்துரு, பி.ஸ்ரீராம், ஆர்.தீபன், எஸ்.அனுபிரியா உள்ளிட்ட மகளிர் அணி, இளைஞர் அணி மற்றும் கழக முன்னோடிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்கின்றனர். பகுதிப் பிரிநிதி கு.சந்திரன் நன்றி கூறுகிறார்.

170வது வட்ட பகுதி பிரதிநிதி உள்ளிட்ட கழக தோழர்கள், கழக முன்னோடிகள், அனைத்து அணிகளை சார்ந்த நிர்வாகிகள், பாக ஒருங்கிணைப்பாளர்கள், பாகபொறுப்பாளர்கள், பாக களப்பணியாளர்கள், வட்ட இளைஞர் அணி நிர்வாகிகள், வட்டதகவல் தொழில்நுட்ப அணி நிர்வாகிகள் பெருந்திரளாக இக்கூட்டத்தில் பங்கேற்று சிறப்பித்து தருமாறு வட்டகழக செயலாளர் கோட்டூர்புரம் க.மணி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கோவை மு.மா.சண்முகசுந்தரம்

**செப்டம்பர் 1 (2018)**



திராவிட இயக்கத்தைத் தொடர்ந்து, கழகம் துவங்கியதும் அதில் தன்னை இணைத்துக் கொண்டவர்.

கோவை பகுதியில் கழக முன்னோடிகளின் பெயரில் பல்வேறு மன்றம் – படிப்பகங்களை நிறுவிய இவர், இராமநாதபுரம் பகுதியில் ‘கலைஞர் தமிழ் மன்றம்’ தொடங்கி, அதில் திருக்குறள் வகுப்பும், திருக்குறள் மாநாடும் நடத்தி வந்தவர்.

ஒன்றுபட்ட கோவை மாவட்ட அவைத் தலைவராக பொறுப்பு வகித்தவர்.

இந்தி எதிர்ப்பு போராட்டம், விலைவாசி உயர்வு எதிர்ப்பு போராட்டம் உள்ளிட்ட கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**